2010 மே 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 168, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். பாபு, மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.

168—

இடம் ஒதுக்கீடு

***6039—திரு. வி.எஸ். பாபு:**

மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் புதியதாகத் தொழில் தொடங்கும் மென்பொருள் நிறுவனங்களுக்கு வட சென்னையில் இடம் ஒதுக்கீடு செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன். (அ) மற்றும் (ஆ) சென்னையில் புதிதாகத் தொழில் தொடங்கும் மென்பொருள் கம்பெனிகளுக்கு வட சென்னைப் பகுதிகளில் இடம் ஒதுக்கீடு செய்யும் திட்டம் ஏதும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். பாபு.

திரு. வி.எஸ். பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரிலுள்ள அனைத்து மென்பொருள் பூங்காக்களும் Tidel Park, Tisel Park, Infosys போன்ற அனைத்து வெளிநாட்டு மென்பொருள் மற்றும் computer நிறுவனங்கள் தென் சென்னைப் பகுதிகளில்தான் அமைந்துள்ளன. அதனால், தரமணி, சோழிங்கநல்லூர் போன்ற பகுதிகளில் ஏற்பட்டுள்ள மக்கள் நெருக்கடியையும், போக்குவரத்து நெரிசலையும் குறைக்கும்வகையில் வட சென்னைப் பகுதிகளில் குறிப்பாக, மாதவரம் போன்ற பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கர் காலி நிலங்களை கையகப்படுத்தி, வட சென்னை மக்களின் குறைகளைப் போக்க மென்பொருள் பூங்காக்களை நிறுவ அரசு முன்வருமா என்று தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

[2010 மே 11

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட சென்னையிலே அம்பத்தூர் தொழிற்பேட்டையில் இப்போது H.C.L., TERRO, Royal Bank of Scotland, First Source Solutions, Reliance, Kone, Genesis, Dexterity என 8 வெளித் தொடர்புத் துறை மையங்கள் செயல்படுகின்றன. அங்கு சுமார் 10,000 பேர் பணிபுரிகின்றார்கள். அதேபோல, நான்கு தனியார் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் Kochar, Ambit, India Land, RR Skyline ஆகியன 26 இலட்சம் சதுர அடியில் அமைக்கப்பட்டு அங்கும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எதிர்காலத்தில் தேவையிருப்பின், இடம் கிடைத்தால், வட சென்னையில் அரசு தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைப்பது குறித்துப் பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். பாபு.

முற்பகல் 10–15

திரு. வி.எஸ். பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன பதில் நன்றியைத் தெரிவிக்கும் வகையில் இருந்தாலும், தொடங்கப்படவுள்ள அந்த இடங்களுக்கு, அரசுப் புறம்போக்கு நிலங்கள் எவ்வளவு கையகப்படுத்தப்பட்டுள்ளன? அந்த இடத்தில் எப்போது மென்பொருள் பூங்காக்களெல்லாம் தொடங்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள். நீங்கள் அதை தனிக் கேள்வியாக போட்டுக்கொள்ளுங்கள். திரு. வி.எஸ். பாபு. (குறுக்கீடு)

மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடம் கையகப்படுத்தப்பட்டபிறகு தேவை இருப்பின் அரசே இது குறித்து பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ்.கே. ராஜேந்திரன்.

2010 மே 11]

திரு. கே.எஸ்.கே. ராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் மதுரை மாநகரம் தொழில் நகரமாக ஆக வேண்டுமென்கிற ஆர்வத்தோடு அங்கே தகவல் தொழில்நுட்பப் பூங்கா அறிவிக்கப்பட்டு, அரசின் சார்பாக அதனுடைய உள் கட்டமைப்புகளுக்கான வேலை முடிக்கப்பட்டுவிட்டது. அங்கே, இதுவரை எந்தவொரு மென்பொருள் நிறுவனமும் ஆரம்பிக்கப்படவில்லை. அவர்களுக்கு காலக்கெடு ஏதும் நிர்ணயிக்கப்பட்டுள்ளதா? மென்பொருள் நிறுவனங்கள் எப்போது அங்கே ஆரம்பிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையில் வடபழஞ்சி, இலந்தைகுளம் ஆகிய இரண்டு இடங்களில் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் அமைக்கப்படவுள்ளன. அங்கு HCL, Sutherland போன்ற பன்னாட்டு நிறுவனங்கள் நம் உள் கட்டமைப்பு வேலைகள் முடித்தவுடன் விரைவில் பணிகளைத் தொடங்குமென அவர்கள் அறிவித்துள்ளார்கள். முக்கியமாக வடபழஞ்சியில் இன்னும் இரண்டு மாதங்களில் பணிகள் நிறைவடைந்து திறப்பு விழா நடத்தப்படும். அதற்குப் பிறகு தனியார் நிறுவனங்கள் அதற்குரிய முயற்சியினை எடுப்பார்கள் என்று எங்களுக்கு உறுதியளித்துள்ளார்கள்.

அதேசமயத்தில், 50 ஆயிரம் சதுரடி அளவில் ஒரு Administration building போட்டு, அங்கு நாங்கள் மற்ற சிறு நிறுவனங்களுக்கு வாடகைக்குத் தருவதற்கான முயற்சியையும் மேற்கொண்டுள்ளோம் என்பதை இந்தத் தருணத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி.

திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மென்பொருள் பூங்கா மூலம் தமிழகத்திலிருந்து இந்த ஆண்டு ஏற்றுமதி செய்யப்பட்ட மென்பொருட்களின் மதிப்பு எவ்வளவு என்பதையும் இன்னும் எத்தனை புதிய மென்பொருள் பூங்காக்கள் தொடங்குவதற்காக இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2010–2011–க்கான Software Export விவரங்களை, Software Technology Park of India-தான், எவ்வளவு மென்பொருட்கள் export ஆனது என்ற சரியான நிலவரத்தைக் கூறுவார்கள். அந்த Accurate report இதுவரை நமக்கு வரவில்லை. சராசரியாக, கடந்த வருடத்தைவிட ஒரு ஐந்தாயிரம் கோடி ரூபாய் மென்பொருள் ஏற்றுமதி அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதேபோல், ELCOT மூலமாக மொத்தம் 8 தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள் அமைக்கப்பட்டுள்ளன என்பதை சட்டமன்ற உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 169, மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம், மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

169—

மீன் ஏற்றுமதி மையம்

***109560—திரு. கி. ஆறுமுகம்:**

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு தொகுதி, சதுரங்கப்பட்டினத்தில் மீன்கள் ஏற்றுமதி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) செங்கல்பட்டு தொகுதி, சதுரங்கப்பட்டினம் பகுதியில் மீன்கள் ஏற்றுமதி மையம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.